செ.வெ.எண்: 26/ஜூன் நாள் : 13.06.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## தமிழ்நாடு சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலவாரியம் மூலம் விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் உதவித் தொகை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தமிழ்நாடு சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலவாரியம் மூலம் விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் உறுப்பினர்கள் விபத்தினால் மரணம் அடைந்தால் ரூ.1,00,000/- உதவித்தொகையும், விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக் கேற்ப ரூ.10,000/- முதல் ரூ.1,00,000/- இழப்பீடு வழங்கப்படுகிறது. உறுப்பினர்களுக்கு இயற்கை மரணம், ஈமச்சடங்கு செலவினம் ஆகியவையும் வழங்கப்படுகிறது. இதுபோல் உறுப்பினர் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும் மாதந்தோறும் முதியோர் ஒய்வூதியம் வழங்கப்படுகிறது. எனவே இதுவரை இராமநாதபுரம் மாவட்டத்தில் சீர்மரபினர் நலவாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய விடுப்பட்ட சீர்மரபினர் இன மக்கள் எவரேனும் இருப்பின் அவர்கள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து உறுப்பினராக சேர்ந்து தமிழக அரசால் வழங்கப்படும் நல உதவிகளை பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**